


கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அண்ணா அறிவாலயத்தில் சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி, மாவட்டப் பிரதிநிதி இ.சையத் அலிகானின் புதல்வர், ”MR TEEN TAMILNADU 2026 என்ற பட்டத்தை வென்ற சுகைப் சையத் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### 118- ஆவது பிறந்த நாள்:

# திருச்சியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை!

## கழக முதன்மைச் செயலாளர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு தலைமையில் அணிவிக்கப்படுகிறது!

திருச்சி, செப். 15-

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118-ஆவது பிறந்தநாளையொட்டி இன்று (15.9.2026) திருச்சியிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும் எதிர்க் கட்சித் துணைத் தலைவருமான கே.என். நேரு அவர்கள் தலைமையில் அணிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கழக முதன்மைச் செயலாளரும் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கே.என். நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாள் இன்று (15-09-2026 - செவ்வாய்க்கிழமை) காலை 08.30 மணியளவில் காஞ்சித் தந்த கற்பூர பெட்டகம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை தந்தவர், தமிழ் நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 118-வது பிறந்த நாளை முன்னிட்டு கழக முதன்மைச் செயலாளர், சட்டப்பேரவை எதிர்க் கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு அவர்களின் தலைமையில் ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட தி.மு.க.சார்பில் திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் மத்திய மாவட்ட செயலாளர் வழக்கறிஞர். க.வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி ந.தியாகராஜன் மேற்கு மாநகர செயலாளர் மேயர்.மு.அன்பழகன் கிழக்கு மாநகர செயலாளர். மு.மதிவாணன், ஆகியோர்கள் முன்னிலையில் திருச்சி சிந்தாமணியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு பின்னர் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.

இந்நிகழ்வில் திருச்சி மாவட்ட இந்நாள், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில கழக நிர்வாகிகள், திருச்சி மத்திய, தெற்கு, கிழக்கு, வடக்கு மாவட்ட கழக, மாநகர, நகர,ஒன்றிய, பகுதி பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், கழக வட்ட, கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த நிர்வாகிகள்,கழக மூத்த முன்னோடிகள், செயல்வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் முதன்மைச் செயலாளர் கே.என். நேரு அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# முப்பெரும் விழா தமிழர்களின் குடும்ப விழா!

குருகுல போராட்டம்,வைக்கம் போராட்டம், ஆலய பிரவேசம், சுயமரியாதை இயக்கம், தீண்டாமை ஒழிப்பு என்று தன்னுடைய பொதுவாழ்வு முழுவதும் போராட்ட வீரராகவே களத்தில் நின்றவர் தந்தை பெரியார் “ போருக்கு தயாராக இருப்பவர்கள் சிறைச்சாலைக்கு செல்லுதல் என்ற நிலையோடும் நினைப்போடும் இருக்கக் கூடாது.செங்குருதி கொட்டவும், செத்து மடியவும் சித்தமாக இருக்க வேண்டும்.தாங்கள் முடிக்க என்னும் கருமத்துக்கு சிறைக்கு செல்லுதல் என்பது மிக மிக சாதாரணமான காரியமென்று யாரும் எண்ணி விடக்கூடாது, சிறை சொல்வது போதாதா? என்று எண்ணி விடக்கூடாது,சிறைச்சாலைக்கு செல்வது சாதாரண ஒரு அற்ப காரியம் ஆகும். அதை மூன்றாம் தர ஆட்களுக்கு விட்டு விட வேண்டும் பிரமுகர்களும், பொறுப்பானவர்களும் அடிபடவும்,உயிர்விடவும் தயாராக இருக்க வேண்டும்...! “ என்று தமிழ்நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து விடுதலை நாளேட்டில் தலையங்கம் தீட்டிய பெரியார் அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 17ஆம் நாள் ஆகும்.

“மதம்.மொழி,கலாச்சாரம்,ஓர் குடிமக்கள் என்ற உணர்ச்சி,வரலாற்றுப்பந்தம் இவைகள் தான் இன இயல்பாகும்.இந்த வகையில் பார்த்தால் இந்தியாவில் தனித் தனி இனங்கள் உண்டு,அவர்களை மூன்று பெரும் பிரிவுகளாக கொள்ளலாம். திராவிடர் முஸ்லிம்,ஆரியர் இந்த மூன்று வகை இனங்களில் திராவிடருக்கும், முஸ்லிமும் இன இயல்புகளில் அதிக வித்தியாசம் கிடையாது ஆரிய இன இயல்புகளுக்கும் மற்ற இரு இன இயல்புகளுக்கும் துளியும் பொருத்தம் கிடையாது, பகைமை பெரிதும் உண்டு.

எனவே இந்த அடிப்படையில் இந்தியாவை இன வாரியாக பிரிக்க வேண்டும் இல்லையேல் எந்த இனம் தந்திரத்தாலும் சூழ்ச்சியாலும் அதிகாரத்தைப் பெற்று இருக்கிறதோ அந்த இனத்திற்கு மற்ற இனங்கள் அடிமையாக இருக்க நேரிடும்..!” என சூளுரைத்து பொதுவாழ்வில் புயல் போல் உருவெடுத்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் செப்டம்பர் 15 ஆம் நாள் ஆகும்.

1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் தேதி சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்கா மைதானத்தில் கொட்டும் மழையில் தி.மு.க. கழகம் துவங்கப்பட்ட நாள். சமுதாய துறையிலே சீர்திருத்தம், பொருளாதார துறையில் சமதர்ம குறிக்கோள், அரசியலில் வட நாட்டு ஏகாதிபதியத்தில் இருந்து விடுதலை ஆகிய கொள்கைகள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும் என அறிஞர் அண்ணா அப்போது அறிவித்தார்.

தந்தை பெரியார் பிறந்த நாள்,அறிஞர் அண்ணா பிறந்தநாள், தி.மு.க. கழகத்தின் பிறந்தநாள்.இந்த மூன்று பிறந்த நாள்களையும் இணைத்து “முப்பெரும் விழா” என தமிழ்நாட்டுக்கு முதல் முதலாக அறிவித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 1974 ஆம் ஆண்டு சென்னை மெரினா கடற்கரையில் எழுச்சியோடும்,துடிப்போடும் லட்சோபலட்சம் தமிழர்கள் திரண்டிருக்க நடைபெற்ற முப்பெரும் விழாவில் ஒவ்வொரு விழாவை பற்றியும்,அதன் சிறப்புகள் பற்றியும் முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை மறக்க முடியாத வரலாறு !



1985 ஆம் ஆண்டு முதல் முப்பெரும் விழாவில் பெரியார்,அண்ணா,கலைஞர் என முப்பெரும் தலைவர்கள் பெயரில் விருதுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டது. அன்று முதல் தியாகத்தால்,கொள்கை உறுதியால்,தன்னலமற்ற உழைப்பால்,மக்கள் தொண்டால்,உயர்ந்தோங்கி நின்ற கழகத்தினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு தலைவர்களின் பெயரில் உருவாக்கப்பட்ட விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் முப்பெரும் விழாவில் வழங்கப்பட்டு வருகின்றது.

1999 ஆம் ஆண்டு திமுகவின் பொன் விழா ! அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் ஆட்சி சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார்கள்,அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் பெயரில் மேலும் ஒரு விருது வழங்கப்படும் என்று அறிவிப்பினை முத்தமிழறிஞர் கலைஞர் வெளியிட்டார்கள்.

2018 ஆம் ஆண்டு தி.மு.க.வின் ஒப்பாரும் மிக்காரும் இல்லா அன்பு அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கழகத்தினரால் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முப்பெரும் விழாவில் இனமான பேராசிரியர். அவர்களின் பெயரில் விருது அறிவிக்கப்பட்டு அது நடைமுறையில் இருந்து வருகிறது.2025 ஆம் ஆண்டு முதல் “முரசொலி செல்வம்” விருது முரசொலி அறக்கட்டளை சார்பில் கழக முப்பெரும் விழாவில் வழங்கப்பட்டு வருகிறது .

**தி.மு.க.வின்**

**வெள்ளி விழா 1974 ஆம் ஆண்டு**

**பொன் விழா 1999 ஆம் ஆண்டு**

**பவள விழா 2024 ஆம் ஆண்டு**

**இந்த மூன்று முக்கிய நிகழ்வுகளும், லட்சோபலட்சம் கழகத் தொண்டர்களின் எழுச்சிமிகு உணர்ச்சிகளை பிரதிபலிக்கின்ற வகையிலும்,உலகமெல்லாம் பரவி, விரவி கிடக்கின்ற தமிழர்களின் உள்ளமெல்லாம் குதூகலிக்கின்ற வகையிலும் முப்பெரும் விழா தமிழினத்தின் இல்லந்தோறும் கொண்டாடும் விழாவாக அமைந்துள்ளது.**

மதுரை ஜான்சிராணி பூங்காவில் மைதானத்தில் திமுகவினை இளைஞரணி மூலம் துடிப்பான இயக்கமாக மாற்றி விட இளைய தலைமுறையின் எழுச்சி மிக்க வரவை திமுகவில் ஏற்படுத்திட முனைந்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் மற்றும் கழக மாவட்ட செயலாளர்கள்,முன்னோடிகள் என 100% ஆதரவோடு அன்று நம் தளபதியார் இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்று கொண்டார்.

திமுகழகம் புதிய எழுச்சியோடும்,உணர்ச்சியோடும்,பொங்கிப் பெருக்கெடுத்தோடும் காவிரி,வைகை நதிகளை போல தமிழ்நாட்டு மக்களிடத்தில் புதிய நம்பிக்கையை தோற்றுவித்தது.நமது தளபதியரின் தலைமையில் மக்கள் தொண்டு, தமிழர் நலம், கழகத்தின் வளர்ச்சி, போராட்ட களங்கள் என அனைத்திலும் திமுகவின் இளைஞர் அணி ஈட்டி முனைகளாக செயல்பட்டது.’எள்’ என்றால் எண்ணெயாக நின்றது,தாய் கழகத்துக்கு துணையாகவும்,தூணாகவும் திகழ்ந்தது. மக்களிடமும், கழகத்தொண்டர்களுக்கு மத்தியிலும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியதோடு,எதிர்கால தமிழ்நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக அன்றே நமது அன்பு அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உயர்ந்தோங்கி நின்றார்.



**முனைவர்,பி.பழனியப்பன்**
தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர்
மேனாள் அமைச்சர்.

அறிஞர் அண்ணா,முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்து தந்த வழியில் அவர்கள் நமக்கு அளித்த கொள்கையில்,குறிக்கோளில்,கோட்பாட்டில் லட்சியத்தில்,கடுகளவும் பிரளாமல் கழகம் எனும் கற்கோட்டையை மேலும் உறுதியாக கட்டமைத்தார் நமது அன்பு அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். சென்னை மாநகரத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக,மக்கள் சேவையில் படிப்படியாக பல்வேறு நிலைகளில் செயல்பட்டு,மகத்தான சாதனைகளை படைத்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக,கழகத்தின் தலைவராக உருவெடுத்தவர் அவர்.

**தனது 60 ஆண்டு கால பொதுவாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர் நீச்சல் போட்டே இமயத்தின் சிகரத்தை தொட்டவர் அவர் என்று சொன்னால் அது மிகையாகாது. இதுவே ரீல்ஸ் ‘டல்பதி’க்கும் உண்மையான தளபதிக்கும் இருக்கும் வித்தியாசம். இன்று மக்களை சந்திக்காமல்,மக்கள் பிரச்சினை கள் என்ன என்று கூட தெரியாமல்,கொள்கை கோட்பாடு என எதுவும் புரியாமல் மஜாவாக ஆட்சி கட்டிலிலே அமர்ந்திருப்பவர்களுக்கு “மிசா” என்றால் என்ன என்றோ,இடையறாது மக்கள் பணியாற்றி,உழைத்து மக்கள் மனதில் இடம் பிடித்து ஆட்சியில் அமர்ந்தவர்களின் மரியாதை என்ன என்றோ,என்றைக்கும் புரியாது.**

திமுகவின் பவள விழா ஆண்டான 2024 ஆம் ஆண்டு முதல் கழகத்தின் ஈடு இணையற்ற தலைவர் திராவிட பேரரசர் அன்பு அண்ணன் அவர்கள் பெயரில் “தளபதி மு.க.ஸ்டாலின் விருது” அறிவிக்கப்பட்டு முப்பெரும் விழாவில் வழங்கப்பட்டு வருகிறது.

“என் பாதை சுயமரியாதை பாதை,தமிழின நலம் காக்கும் பாதை,தமிழ் மொழி காக்கும் பாதை,பெரியார் பாதை, அண்ணாவின் பாதை,அறவழிப்பாதை, அமைதி பாதை, ஜனநாயக நெறிமுறை பாதை,பல முனைகளில் பயமுறுத்தினாலும் அறிஞர் அண்ணா பாதையில் இருந்து மாற மாட்டேன் எது வேண்டுமானாலும் வரலாம், புயல் வரலாம்,சூறாவளி வரலாம்,கொந்தளிப்பு வரலாம் நான் மாறவே மாட்டேன்” என்று தமிழினத்துக்கு உறுதி அளித்து தமிழ் மண்ணை காத்து நின்ற முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் அடிச்சுவட்டில் வீறு நடை போட்டுக் கொண்டிருப்பவர் தான் நமது தலைவர் மு க ஸ்டாலின்.

**5 ஆம் தலைமுறையை நோக்கி திமு கழகம் மக்கள் சேவையில் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிறது.**

**77 ஆண்டு கால கழகம்,**

**2 கோடி தொண்டர்களை தன்னகத்தே கொண்டுள்ள மிகப்பெரிய ராணுவ சேனை!**

கன்னியாகுமரியில் இருந்து சென்னை கடற்கரை வரை உயிர் துடிப்பான செயல் மறவர்களின் பாசறை !

“மானம் அவன் கேட்ட தாலாட்டு,மரணம் அவன் ஆடிய விளையாட்டு..” என சங்க தமிழில் உள்ள புறநானூற்று கட்டிளம் காளைகளோடு ஒப்பிட்டு கழகத்தினரை தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் டாக்டர்.கலைஞர்.ஈட்டி முனைக்கும் இமை கொட்டா இளைஞர் பட்டாளம் நிரம்பி வழியும் படைவரிசையில் “வெட்டிவா” என்றால் கட்டி வரும் வீரர்கள் நிறைந்த கழகம்.அந்த கழகத்தின் இளைய தலைமுறை எழுச்சி வடிவம் தான் கழக இளைஞர் அணி செயலாளர்,சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், நம் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

**வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளாய்**

**கழகத்தின் இளைஞர் பட்டாளம் !**

**கொந்தளிக்கும் கடலாய் !**

**குமுறும் எரிமலையாய் ! தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் குவிந்து நின்று இலக்கு நோக்கி பாய்ந்திட காத்து நிற்கின்றனர். அவர்களை வழிநடத்திட,ஆற்றல்படுத்திட,களம் அமைத்திட நமது இளம் தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பம்பரமாக சுழன்று பணியாற்றி,எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்கிறார்.**

சட்டமன்றத்தில் அவர் ஒருவர் கேட்கும் கேள்விகளுக்கு 5 அமைச்சர்கள் சேர்ந்தும் பதில் அளிக்க முடியாமல் திணறுவதை நாம் கண்கூடாக பார்த்தோம், தமிழ்நாட்டின் முதலமைச்சரோ அவர் கேள்விக்கு பயந்து வெளியே ஓடுகிறார். 3 நாட்கள் கழித்து வந்தும் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்காமல் சுற்றி வளைத்து பஞ்ச் டயலாக்குகளை பேசி ரீல்ஸ்க்கு சூட்டிங்கை நடத்தி விட்டு,ஏதோ ஒப்பற்ற ஓர் உரையை நிகழ்த்தி விட்டதாக புளகாங்கிதம் அடைந்து கொள்கிறார்.

நமது கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பாசிச வெறி பிடித்த ஆளுநரை சட்டமன்றத்தில் இருந்து வெளியே ஓட விட்டார். இன்று கழக இளைஞரணி செயலாளரும் எதிர்க்கட்சிதலைவருமான நமது இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கேள்விக்கு பயந்து ரீல்ஸ் முதலமைச்சர் சட்ட சபையில் இருந்து வெளியே ஓடியுள்ளார்.புலிக்கு பிறந்தது பூனையாவதில்லை,இந்த சின்னஞ்சிறு எலிகளின் சலசலப்பு நீண்ட நாட்கள் நீளப்போவதும் இல்லை.

2026 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெறவிருக்கும் கழகத்தின் முப்பெரும் விழாவில் கழக பாசறைகளுக்கு கழகத் தலைவரின் அறைகூவல் காத்திருக்கிறது, ‘இம்’என்றால் சிறைவாசம் ‘ஏன்’ என்றால் வனவாசம் ! இதுதான் தமிழ்நாட்டின் இன்றைய அரசியல் களம் என்ற சர்வாதிகார நிலை தலைவிரித்தாடுகிறது. கழகத்தினர் பார்க்காத அடக்கு முறைகளா? பொய் வழக்குகளா? ஓராண்டுக்கும் மேலாக முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் வீட்டில் சிறை வைக்கப்பட்டார்,அவர் உடன்பிறப்புகளுடன் தொடர்பு கொள்ள கூடாது என்று முரசொலி கடிதங்கள் முடக்கப்பட்டது, பேச்சுரிமை,கருத்துரிமை,நடமாட உரிமை என அனைத்து அடிப்படை உரிமைகளை பறித்தனர் டெல்லி கட்சியினர்.

தி.மு.க. கலங்கவில்லை !

கண்ணீர் விடவில்லை !

அடிக்க அடிக்க எழும் பந்தினைப் போல

தி.மு.கழகம்

அரிமாவென ஆர்த்தெழுந்து நின்றது.

ஆள் தூக்கி சட்டம் அவசர நிலை பிரகடனம் கண்டது நம் கழகம். அடக்குமுறையினை ஏவி விட்டு நமது கழகத்தலைவர் தளபதியார் உட்பட ஏராளமான கழகத்தினரை சிறையில் அடைத்து,அடித்து துன்புறுத்தி மிரட்டினர்.வீர மறவர்கள் சிட்டிபாபு,சாத்தூர் பாலகிருஷ்ணன் ஆகியோரை சிறைக்குள்ளேயே அடித்து கொன்று, நம் கழகத்தலைவர் அவர்களின் முதுகெலும்பை நொறுக்கி மரணத்தின் எல்லைக்கே கொண்டு சென்ற போதும் அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறைக்கு அஞ்சாமல் எதிர்த்து நின்ற இயக்கத்தை,அதை வழிநடத்தும் தகுதியான நமது கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையும்,அவரின் வார்ப்பாக இன்று ஈடில்லா இளைஞர் அணியை வழிநடத்தும் கருப்பு சிவப்பு படையின் வீரர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர்,நமது இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை கொண்ட இயக்கம் நமது தி.மு.கழகம்.

இன்றும் நமது கழகம் மட்டுமே தமிழ் இனத்தின் அரனாக திகழ்கிறது.இன்னும் 100 ஆண்டுகள் அல்ல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் திமுக தமிழ் இனத்தின் மூச்சாகவும், பேச்சாகவும், உயிராகவும், உடலாகவும் இருக்கும். நடைபெற உள்ள முப்பெரும் விழா எனும் நமது குடும்ப விழாவில் நாம் அனைவரும் திரளாக கலந்து கொண்டு கழகத்தையும் தமிழ்நாட்டையும் அடுத்த நிலைக்கு எழுச்சியோடு எடுத்துச் செல்ல உறுதி பூண்டு புறப்படுவோம்!!

என்றும் கழகத் தலைவர் வழியில்